பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

03 12 2024 TUESDAY 12 40PM

வணக்கம், ஆகாஷவாணி — செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மாற்றுத்திறனாளிகள் தடைகளின்றி வாழ்வதற்கான ஆரோக்கியமான சூழலை உருவாக்க வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாட்டு மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.
- புதிய குற்றவியல் நடைமுறைச் சட்டங்கள் ஆங்கிலேய ஆதிக்க மனப்பான்மையிலிருந்து இந்தியாவை விடுவிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- திறன் இந்தியா இயக்கம் எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இளையோரை தயார்ப்படுத்தி வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி தெரிவித்துள்ளார்..
- ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு மற்றும் நிவாரண உதவிகளை தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- ஆசிய மகளிர் ஹேண்ட்பால் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஹாங்காங்கை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

மாற்றுத்திறனாளிகள் தடைகள் இன்றி வாழ்வதற்கான ஆரோக்கியமான சூழலை உருவாக்க வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாட்டு மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக செயல்பட்டு வருபவர்களுக்கான தேசிய விருதுகளை புதுதில்லியில் இன்று அவர் வழங்கினார்.

இவ்விழாவில் உரையாற்றிய குடியரசுத்தலைவர், மாற்றுத்திறனாளிகளை தொழில் முனைவோர்களாக ஆக்கும் வகையில், அவர்களது திறன்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்த விருதை பெற்றவர்கள் சமூகத்தில் முன்மாதிரியாக திகழ்வதாகவும் அவர் கூறினார்.

நாடுமுழுவதும் உள்ள மாற்றுத் திறனாளிகளை ஊக்கப்படுத்தும் வகையிலும், அவர்களின் செயல்திறனை மேம்படுத்தும் வகையிலும், இந்த விருது வழங்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

சக மனிதர்களைப் போன்று பணியாற்ற முடியும் என்ற நம்பிக்கையை மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்குவதும், மனதளவில் அவர்கள் சமத்துவத்தை உணரச் செய்வதும் நமது கடமை என்று திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்தார்.

>>>>><<<<<

புதிய குற்றவியல் நடைமுறைச் சட்டங்கள் ஆங்கிலேய ஆதிக்க மனப்பான்மையிலிருந்து இந்தியாவை விடுவிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சண்டிகரில் மூன்று புதிய குற்றவியல் சட்டங்களின் வெற்றிகரமான அமலாக்கத்தை நாட்டுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றுப் பேசினார்.

புதிய குற்றவியல் சட்டங்கள் அரசியலமைப்பின் லட்சியங்களை முன்நிறுத்தி செய்படும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இச்சட்டங்களை வெற்றிகரமாக அமல்படுத்தி வரும் பஞ்சாப், ஹரியானா உயர்நீதிமன்ற வழக்கறிஞர்களுக்கு பிரதமர் பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, மக்களுக்கு நீதி வழங்கும் வகையில் இச்சட்டங்கள், இந்தியர்களால் உருவாக்கப்பட்டு, கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

>>>>><<<<<

நாட்டின் முதல் குடியரசுத்தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாதின் பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, குடியரசுத்தலைவர் மாளிகையில் அன்னாரது திருவுருவப் படத்திற்கு குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், அரசியல் அமைப்பு நிர்ணய சபையின் தலைவராக இந்திய ஜனநாயகத்திற்கு ராஜேந்திர பிரசாத் ஆற்றியுள்ள பங்களிப்பு ஈடுஇணையற்றது என்று தெரிவித்துள்ளார்.

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள செய்தியில், டாக்டர் ராஜேந்திர பிரசாத் நாட்டுக்காக ஆற்றிய பணிகளை இன்று நினைவுகூர்வோம் என்று கூறியுள்ளார்.

>>>>><<<<<

தமிழகத்தில் ஃபெஞ்சல் புயல் பாதிப்பு குறித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலினிடம் இன்று தொலைபேசி வாயிலாக கேட்டறிந்தார்.

தமிழகத்திற்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதாக அப்போது பிரதமர் உறுதியளித்ததாக செய்திகள் தெரவிக்கின்றன.

>>>>><<<<<

ESI மருத்துவமனைகளில் சிறப்பு நிபுணர்களாக மருத்துவர்களை பணியமர்த்தும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மக்களவையில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை இணையமைச்சர் திருமதி. ஷோபா கரந்தலாஜே, எழுத்துபூர்வமாக அளித்துள்ள பதிலில், சமீபத்தில் இந்த மருத்துவமனைகளில் காப்பீட்டு மருத்துவ அலுவலர் உள்ளிட்ட பதவிகளில் ஆயிரத்து 323 பேர் பணியமர்த்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும், ஒப்பந்த அடிப்படையிலான மருத்துவர்களின் ஊதியத்தை மறுவரையறை செய்யும் பணி நடைபெற்று வருவதாகவும், இதற்கு முன்னர் 2022ஆம் ஆண்டில் அவர்களுக்கான ஊதியம் மாற்றியமைக்கப்பட்டதாகவும் திருமதி. ஷோபா கரந்தலாஜே குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான கேள்விக்கு மக்களவையில் இன்று பதிலளித்த மத்திய ஊரக மேம்பாட்டுத்துறை இணையமைச்சர் திரு. சந்திரசேகர் பெம்மசானி, நடப்பாண்டின் பட்ஜெட்டில் இத்திட்டத்திற்கு 87 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக கூறினார்.

இத்திட்டத்தின் கீழ், பணியாளர்களுக்கான ஊதியம் கடந்த ஐந்தாண்டுகளில் 43 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

திறன் இந்தியா இயக்கம் எதிர்காலத்திற்கேற்ப இளையோரை தயார்ப்படுத்தும் நோக்கில் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

வேளாண்மை தவிர்த்த இதர துறைகளில் இளையோருக்கான வேலைவாய்ப்பு குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு மக்களவையில் எழுத்துபூர்வமாக அளித்த பதிலில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இளையோரின் திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டங்களுக்கு போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் திரு. ஜெயந்த் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

குவைத் நாட்டின் நிதியமைச்சர் திரு. Abdullah Ali Al-Yahya இன்று இரண்டு நாள் பயணமாக புதுதில்லி வருகிறார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை அவர் சந்தித்து பேச்சு நடத்துகிறார்.

>>>>><<<<<

ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு மற்றும் நிவாரண உதவிகளை தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கடலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 5 லட்சம் ரூபாய் இழப்பீட்டுத்

தொகை வழங்கப்படும் என்றும், சேதமடைந்த குடிசைகளுக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மழையினால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 17 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் மானாவாரி பயிர்களுக்கு ஹெக்டேருக்கு 8 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வெள்ளத்தால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும், ஆதார் மற்றும் குடும்ப அட்டை உள்ளிட்டவற்றை இழந்தோருக்கு சிறப்பு முகாம்கள் மூலமாக அவை வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

மகளிர் தொழில்முனைவோரை உருவாக்குவதில் தமிழகம், நாட்டிலேயே இரண்டாவது இடம் வகிப்பதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

மாநில மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. கயல்விழி செல்வராஜ் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த மூன்றாண்டுகளில் மத்திய அரசின் UDYAM தளத்தில் தமிழகத்தைச் சேர்ந்த 6 லட்சத்து 22 ஆயிரத்து 373 மகளிர் தொழில்முனைவோர் பதிவு செய்திருப்பதாக தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

ஆந்திரா, தெலங்கானா மாநிலங்களின் இருதரப்பு விவகாரங்கள் தொடர்பான அதிகாரிகள் நிலையிலான குழுவின் முதல் கூட்டம், மங்களகிரியில் நடைபெற்றது.

2014ஆம் ஆண்டு அம்மாநிலங்கள் பிரிக்கப்பட்டது முதல், தற்போது வரையிலான பிரச்சினைகள் குறித்து பேச்சு நடத்தும் வகையில் அமைந்த இக்கூட்டத்தில் இரு மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள் உட்பட அதிகாரிகள் பலர் பங்கேற்றனர்.

இரு மாநிலங்களும் தரவுகளை ஒருங்கிணைத்து, புதுப்பித்து அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிப்பது என்று இதில் முடிவெடுக்கப்பட்டது.

>>>>><<<<<

மேற்குவங்கத்தில் மருத்துவப் படிப்பு மாணவர் சேர்க்கைக்கான வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கான இடஒதுக்கீட்டில் முறைகேடுகள் நடைபெற்றதாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பாக மத்திய அமலாக்கத்துறை இன்று அம்மாநிலத்தின் பல்வேறு இடங்களில் சோதனை நடத்தி வருகிறது.

மாநிலத்தில் உள்ள சில தனியார் கல்லூரிகளில் இம்முறைகேடு நடைபெற்றதாக எழுந்த புகார்களின் அடிப்படையில் இச்சோதனை நடத்தப்படுகிறது.

>>>>><<<<<

ஜம்மு கஷ்மீரில் ஸ்ரீநகர் அருகேயுள்ள Dachigam வனப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தேடுதல் வேட்டையில் ஒரு தீவிரவாதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

அப்பகுதியில் தீவிரவாதிகள் நடமாட்டம் இருப்பதாக கிடைத்த உளவுத் தகவல்களின் அடிப்படையில், பாதுகாப்புப் படையினர் நேற்றிரவு முதல் தேடுதல் பணியில் ஈடுபட்டு வருவதாகவும், தீவிரவாதிகள் தப்பிவிடாமல் தடுக்கும் வகையில் அந்த வனப்பகுதி முழுவதும் சுற்றி வளைக்கப்பட்டிருப்பதாகவும் ராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ரஷ்ய நாட்டின் அடுத்த ஆண்டுக்கான பட்ஜெட்டில், பாதுகாப்புத் துறைக்கு 32 புள்ளி ஐந்து சதவீத நிதி ஒதுக்க அந்நாட்டு அதிபர் திரு. விளாடிமிர் புட்டின் ஒப்புதல் தெரிவித்துள்ளார்.

அடுத்த ஆண்டு 126 பில்லியன் அமெரிக்க டாலர், 2026ல் 115 பில்லியன் அமெரிக்க டாலர், 2027ல் 122 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிலும் பாதுகாப்புத்துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்ய அந்நாட்டு நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளன.

>>>>><<<<<

கினியா நாட்டில் கால்பந்து விளையாட்டின் போது பார்வையாளர்களிடையே நேரிட்ட மோதல் மற்றும் நெரிசல் காரணமாக, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 56ஆக உயர்ந்துள்ளது.

அந்நாட்டு அதிபர் திரு. Mamadi Doumbouya இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

ஆசிய மகளிர் ஹேண்ட்பால் சாம்பியன் போட்டி தில்லியில் இன்று தொடங்கியது.

மாலை 6 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா, ஹாங்காங்கை எதிர்கொள்கிறது.

முன்னதாக நடைபெற்ற ஆட்டத்தில் கஜகஸ்தான் 28-26 என்ற கோல்கணக்கில் சீனாவை வென்றது.

----------

குவஹாத்தி மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

>>>>><<<<<

ஆசிய ஜூனியர் ஹாக்கி போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று மலேசியாவை எதிர்கொள்கிறது.

மஸ்கட்டில் இப்போட்டி இரவு மணி 8.30-க்கு தொடங்கும்.

>>>>>END<<<<<